SUPPLEMENTA TO THE BRHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்

புத்ம௧] சிதம்பரம் ஏவிளம்பிஸு மாசிமீ ௰௳க்கு 1898ஸு பிப்வரிமீ 10உ [இல ௰௭.

வைதிகசந்திரமௌலி
மகாபாசுபதாஸ்திரபாராவர்த்தனப்பிரயோகம்.
முன்தொடர்ச்சி.

இவ்விதம் அடிமுதல் இறுதிவரை சுத்த வைதிகாத்து வித சித்தாந்த ஜடிலமான இந்தக்கூர்மபுராணத்தை இவர் தமக்குச் சாதகமென்று நம்பி வெளிவந்தது 'பூனையிடமடைக்கலம் புகுந்த எலியின் கதையையே' நினைப்பூட்டுகின்றது. நிற்க, மேற்காட்டிய ௧௧-வகை வசனபுஞ்சங்களாகிய பதினொரு ரௌத்திராஸ்திரங்களால் அஞ்ஞான்று இலங்கை வாசியின் யாளிவக்திரன், ஸ்ரீஷண்முகபாதபக்த ஸ்ரீ வீரபாகுவின் கையிற்பட்ட பாட்டை இவர் பெற நேர்ந்ததையும், முன்னர் இலங்கை வாசஞ்செய்த ஹிரண்யாக்ஷன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸனிடத்துப் பிரயோகித்த பாசுபதாஸ்திரம் போல் இவர் இஞ்ஞான்று எமது குருநாதன் பரசமய பஞ்சானன பாஞ்சஜன்ய பண்டித ப்ரம்மஸ்ரீ - ஸ்ரீநிவாஸமூர்த்தியிடமும் அவரினத்தாரிடமும் விடுத்த பாசுபதமும் பயனற்று மாண்டதெனவறிக. இதே கூர்மபுராணத்தில் பூர்வபாகம் 16-ம் அத்தியாயத்தில்—

"[illegible] ஹிரண்யாக்ஷஸ்ய [illegible] | [illegible] ||
[illegible] | [illegible]"||

என்று சொல்லப்படுவதைக் காண்க. ஐயன்மீர்! என்றும், இராவணன் முதல் இலங்கை வாசிகள் சைவரே. அவரை வெல்வதும் வைதிக சிகாமணிகளான ஸ்ரீராமாதியார் ஆர்யாவர்த்தவாசிகளென்பதும் எங்கும் பறந்து கிடக்கும் விஷயமல்லவா. மேல் இவர் ஏதோ தமது கனவை நிறைவேற்றியதாக நினைத்ததை மாற்றி இவர் தந்திரச்சொல்லுக்குப் பொருள்கொண்ட வித்தையைக் காட்டுவோம். யாகவிதிகள் தந்திரமென்று மயங்கி ப்ரம்மவித்தியா பத்திராதிபரை விளித்து, இவர் தீக்ஷிதராயது தந்திரத்தாலன்றோ என்றும் கம்பீரம்பேசி வேதத்துள்ளும் தந்திரம் உண்டென்றும், அது தமது அவைதிகாகமத்தும் உண்டென்றும் மிகக் களிகூர்ந்தார். அந்தோ! மேற்கண்ட கூர்மபுராணத்திய வசனம் ௧௧-முதல் பல வசனங்களாலும் வேதங்கள் தோத்திரஞ் செய்யும் அனேக புராணாந்தர வசனங்களாலும் வேதங்களுள் சொல்லப்பட்ட கிரியை, மந்திரக்கிரியை வைதிகக் கிரியை என்றும் சொல்லப்படுமேயன்றி வேறு வகைகூடாதென்றும் சூதசங்கிதையாதிகளில்—

'[illegible] ||'

என்பதாதி பலகோடி வசனங்களில் வேதங்களுக்குப் புறம்பான மோஹன பாஹ்யசாஸ்திரங்களுக்குள்ள இக்குறிப்புப்பெயராய தந்திரச்சொல்லை வேதைகதேசப் பெயராகச் செய்யவிவர் செய்த தந்திரம், அன்று இலங்கை வாசி 'இந்திரசித்தின் 'நிகும்பிலையாக தந்திர' மென நினைத்து எழுதினது போலும்! ஆகையால் ஆர்யாவர்த்த வாசியாய ஸ்ரீலட்சுமணமூர்த்தியிடம் பயன்பட்டவாறாயிற்று. இவ்வளவாடம்பரத்துடன் இவர் ௨௨-ரெ. விஜயத்துவஜத்தில் சேர்த்த பாசுபதாஸ்திர ஏகதேசம் அடிசாய்ந்தது. இனி ௨௩-ம்நெம்பர் விஜயத்துவஜத்தில் இவர் சித்தாந்தம் நாட்டியதைப் பரிசீலிப்பாம்.

23-ம் விஜயத்துவஜத்தில் முதலில் எமது சாஸ்திரிகள் மீது ஏதோ குற்றம்சொல்பவர்போல் எழுந்து வரைந்திட்ட வீண்மொழிகளைக் காட்டி அவற்றையும் முற்றிலும் மறுப்பாம்:—அவையாவன:-சாஸ்திரிகளவர்கள் தமது ப்ரம்மவித்தியா பத்திரிகையிலே வாயுசங்கிதாப்பிரமாணம் ஒன்றைக்காட்டி காமிகாதி ஆகமங்கள் அசிரௌதமாய் அவைதிகமாய் முடிந்தனவென்று பிழையர்த்தஞ்சொல்லிக் கடாவொன்றுபொரிக்க, அதற்குச் சமாதானம் இது இதுவாமென நாம் யாழ்ப்பாணம் இந்துசாதனபத்திரிகையிலே தக்கவிடை யிறுத்தமைகண்டு அச்சாஸ்திரியாரவர்கள் தமது ப்ரம்மவித்தியா பத்திரிகை ஒன்றிலே சிவாகமங்கள் வைதிகங்கள் ஆகலாமெனவும் வேறு அனேகப் பத்திரிகைகளில் அச்சிவாகமங்களை வேதாநுசாரிகள் எனவும் எழுதினமையைப் பின்னர் இப்போது மறந்துபோய் தமது கலி

கண்டகோத்தாரம் என்னும் பிரதியின் பற்பலவிடங்களில் சிவாகமங்களை வேதபாஹ்யமெனவும் அவைதிகமெனவும் பிரமாணம் ஒன்றுமின்றித் தமது முன்னூல் வசனத்தால் தம்வாயையே, மெய்ப்பிரமாணமெனக் கொண்டு வரைந்திடுகின்றார். சிவாகமானுஷ்டானத்தைப் போற்றச் சொல்லி இவரைக் கேட்டவர் யரர்? நெருக்கினவர் யார்? தமக்குச் சிவாகமானுஷ்டானம் வேண்டியதின்றேல் அதனைத் தூஷிப்பது யாதுபயன் கருதியோ? உத்தமோத்தமமாகியத் தில்லைச் சிதம்பர திவ்யக்ஷேத்திரத்தில் வாசம் செய்தற்குரிய பெரும்பேறு பெற்றும், தமது குருவாகிய தியாகராஜமகிராஜர் அவர்களுடைய முன்னோராகிய அப்பயதீக்ஷிதராம் பெரியோரருளிய சிவத்தியானபத்ததி கூறியவாறு சிவாகமமே சொரூபமாயுள்ள நடராஜபெருமானைத் தினந்தோறும் கையெடுத்துச் சிரமீதுவகித்துக் கண்ணீர் ததும்ப வழிபட்டுக் கொண்டு வந்தும், சிவாகமங்களை யவைதிகமென்று தூஷித்து அதனால் சிவாகமசொரூபராகிய .நடராஜவள்ளலரரை அவைதிகரென்றும் தூஷிக்க நேர்ந்தவராய் அதி பாதகத்துக்காளாதல் சாஸ்திரியார் அவர்களைப் போன்ற விவேகிகளுக்கோர்போதும் அடாது! அடாது!! இஃதென்ன கொடுமை! கொடுமை!!' என்று. இதைப்பற்றி எழுதவேண்டியது வெகுவாயிருப்பினும் ஒரு சிறிதே இங்கெழுதுவாம். ஐய, 'இவ்விலங்காஸம்பவர் ஏதோ வாயுசங்கிதாப் பிரமாணம ஒன்றைக்காட்டி' என்றனரே, அதன்கருத்து யாது? அது ஒன்றே காட்டப்பட்டது போதாதென்பதா? அல்லது அப்பிரமாணம், பிரமாணமல்லவென்பதா? இருவகையும் பொருந்துமாறில்வழி காட்டுவாம். அவர்கள் வேதாகமப் பிராமாண்யம் எழுதுமிடம் ஸ்ரீமத் அப்பயதீட்சிதராதி மூதறிஞர் கொண்ட முதுவழியிற்றானே சென்று, வாயுசங்கிதை சூதசங்கிதை கூர்மபுராணம் முதலிய பற்பல பிரமாணங்களைக் காட்டியதுமன்றி தமது ப்ரம்மவித்தியா பத்திரிகையிற்றானே இதே வேதாகமவிஷயமாக சேதுராமபாரதியாருக்கும் வெங்கட்டரமண தாஸருக்கும் நடந்த பெரிய விவாதத்தில் வெங்கட்டரமண தாஸருக்குப் பாரதியார் எடுத்துக்காட்டிய ஆகமவிரோத வசனங்கள் அநேகங்களையும் ஸ்ரீமத் அப்பய தீட்சிதர் அவர்கள் ஸ்ரீ ஹரதத்தசுவாமிகள், ஸ்ரீகண்டயோகிகள் இவர்கள் திருவாக்கினின்றும் மேற்காட்டிய புராணங்களினின்றும் எடுத்த பலவசனங்களையும் பதிப்பித்திருக்கின்றார். அவ்வசனங்களில் கூர்மாதிபுராண வசனங்கள் சிவாகமங்களில் வைதிகம் அவைதிகம் இருவகையுண்டெனக் காட்டின. விசேஷமாய் அவை இவையெனக் குறித்தில. வாயுசங்கிதை அவ்வவைதிகாகமங்கள் காமிகாதி 28-எனத் துணிந்தோதின. ஆகையால் அதைக் குறித்ததேயன்றி மற்றப்புராணங்கள் அனேகங்களில் உள்ள வசனங்களை எடுத்தால் அது அனேக ஆயிரங்களாம். ஆதலால் விட்டிருக்கலரம். வேண்டுமென்று இவர் கேட்பரேல் வேண்டிய வசனங்களை ஆயிரக்கணக்காகக் காட்டச் சித்தமாயிருக்கிறோம். ஆயினும் அப்படி முற்றிலும் காட்டாதொழிந்தோ மல்ல. இவ்வைதிக சந்திரமௌளியாலே அநேகமாய் சூதங்கிதை கூர்மபுராணவசனங்களும் எடுத்துக்காட்டப்பட்டன. நிற்க. ஏதோ யாழ்பாணத்து இந்து சாதனத்தில் 'இது இதுவாம்' எனப் பொருளுரைத்து ஆசிரியர் பக்ஷத்தைக் கண்டித்ததாகக் குறிக்காது மெல்ல மழுப்பினர். இச்சூதை, இவர் வசனங்களைப் பலவற்றை விட்டும் பலவற்றை முறைபுறட்டியும் பொருள்விரித்த நேர்மையை விரித்து அவ்வாயுசங்கிதை வசனங்களை முறை பிறழாது விசாரித்து வெளியிட்டோமாதலின் இங்கு இவர் பழைய கந்தர்வ நகர ராஜதானியில் (முன்னர் குபேரன் இருந்த இடமாதலின் இலங்கையில் என்பதும் கந்தர்வ நகரம் என்பது முயற்கோடுபோன்றது என்பதும் சிலேடையின் பொருள்) ஸ்தாபித்த சித்தாந்தம் ஸொரூப சூன்யமாயிற்று. இதுவும் கிடக்க. ஏதோ ப்ரம்மவித்தியாவில்ஓரிடத்திலும்மற்றும் சிலபத்திரிகைகளிலும் சிவாகமங்கள்வைதிகங்களாகலாம் எனவும் வேதாநுசாரிகள் எனவும் பத்திராதிபர் சொன்னதாகவும், அதை மீண்டும் மறந்ததாகவும் சொல்வது பெரும் விந்தை. என்னையெனில், இவர் சிவாகமபதத்தைக்கண்டால் தாம் அதில் உரிமைகொண்டாடப் பார்க்கின்றார். அதில் இவருக்கு முழுதும் பாத்யமில்லை. வைதிக சிவாகமங்களில் இவர் பிரவேசிக்கக் கூடாது. அவையே வேதசார சிவாகமங்களென வாயுசங்கிதையிலும் கூர்மபுராணத்திலும் சொல்லப்பட்டன. ஸ்ரீ ஹரதத்தாசாரியரும் அவைகளையே வேதாநுசாரி தந்திரம் என்று தமது போகாவலியிற் குறித்தருளினர். ஸ்ரீமதப்பயயோகிகளும் ஸ்ரீ சிவதத்துவவிவேகத்தும் சிவார்க்கமணி தீபிகையிலும் அதே சித்தாந்தம் கொண்டனர். ஆகவே அவைகளையே சிவாகமங்கள் வைதிகங்களாகலாம் என்று பத்திராதிபர் வழங்கியது. நிற்க. வேறு சில பத்திரிகைகளில் என்றதும் முற்றும் பொய். ஆசிரியர் வேறு எந்தப் பத்திரிகைகளிலும் எழுதும் வழக்கமில்லை. கலிகண்டகொண்டகோத்தாரத்தில் சிவாகமதூஷணஞ் செய்தார் சாஸ்திரிகள் எனவும் 'இவரைச் சிவாகமங்களைப் போற்றக்கேட்டவர் யார்? நெருக்கினவர் யார்?' என்று அன்று சாஸ்திரிகள் ஒரு கடாபொரித்தன ரென்றெண்ணி இன்றிங்கிவர் இருகடாப் பொரித்தனர். இது கலிகண்டகோத்தாரத்தின் உண்மைப் பொருளறியாமையாலும் விதண்டையாலுமே பொரித்த கடாவன்றி முறைப்படி விதியோடல்ல. எதனால் எனில் கூறுதும்:—இக்கலிகண்டகோத்தாரமானது தற்காலம் தென்னாட்டில் தோன்றிவரும் புதிய வைஷ்ணவப் புலவர் புகன்றிடும் சைவதூஷணங்களில் திருநீறு திருக்கண்மணிகளைப் பற்றிய தூஷணத்தின் மறுப்பு. அனேகமாய் வைணவர்கள் பரமசிவோத்கர்ஷத்தை தூஷித்துப் பலநூல்களை இத்தேசத்தில் எழுதிவரும் சமயம் அவர்களை மறுத்துத் தஞ் சித்தாந்தத்தை நாட்டிக்கொள்ளவாற்றலின்றி சுவயகோஷ்டிகலகஞரும் தம்பெரியோரைத் தூஷிக்கு மியல்பினரு

மான அந்தணப்போலிகள் மலிந்த இச்சமயத்தில் அவ்வைதிக வைஷ்ணவ துர்வாதங்களை யகற்ற யாம் வைதிகாஸ்திரத்தையே போடவேண்டியதாகையால் வைணவரை ஒழிக்க நேர்ந்தவிடம் சுத்தாவைதிக சைவ தாந்திரிகரையும் விலக்கநேர்ந்தது. மேலும் அந்நூலின் பூர்வபட்சியார் திருநீறு தரித்தலே வைதிகமாகாதெனவும் தாந்திரிகமே யெனவும் பூர்வபக்ஷம் செய்திட்டார் ஆதலின் அதை மறுக்குமிடம் திருநீற்றில் வைதிகாவைதிக பேதத்தை நாட்டவேண்டி நேர்ந்தது. ஆகவே கிரந்தமுறைபற்றியே அஃதெழுதியது. அவ்விடத்தில் பிரதிவாதி சிவாகமங்களுள் 'அவைதிகமே காமிகாதிகள்' என்ற விஷயத்தை ஒப்பினவராதலால் அவருக்கென அவ்விஷயத்தில் பிரமாணம் எடுத்துக் காட்டவேண்டிய வவசியம் இல்லை. ஆகையாற்றான் அவையங்கு காட்டப்படவில்லை. ஆகவே கலிகண்டகோத்தாரத்தும் அதன் பெருமையான குருசரண பூஷணத்தும் அந்நூலுடையார் ஆசிரியர் ஏதும் குறைவுறாரில்லை. இவர் மட்டில் உண்மையறியாது ஆராய்ச்சியின்றி ஏதோ சாஸ்திரிகளவர்கள்மேற் குற்றம் சுமத்தினதாகக் கனவுகண்டார். ப்ரம்மஸ்ரீ அவர்கள் மேற்கண்ட வைணவ தாந்திரிகரை நிக்கிரகித்து சிவாத்துவிதச் செல்வம் பெருக்கவே இதுவரை அனேகநூல்களை இயற்றி அச்சிட்டும் கைப்பிரதிகள் வழியாயும் தென்னாட்டுள்ள அனேக வைதிக சாம்பவர்களுக்குப் பரமோபகாரஞ்செய்து வருவதை இத்தேசவாசிகளான சாம்பவசிகாமணிகள் அறியாதாரும் உளரோ? மேல் ஏதோ அவைதிக காமிகாதி சிவாகமதூஷணம் செய்வது ஸ்ரீ நடராஜபிரானைத் தூஷிப்பதாம் என்றனர். அந்தோ ஸர்வஸ்வரூபனான பரமேசுவரனை எப்பொருளைத் தூஷித்தாலும் தூஷணையேதான். எதை ஸ்தோத்திரம்செய்தாலும் ஸ்தோத்திரந்தான். ஆகவே சிவாகலியாதி அனேகவிதிகாஸ புராணப் பிரஸித்தபரசிவாம்சாவதார ஜகத்குருநாதரை தூஷிப்பதால் இவருக்குக் கிடைக்கக்கூடிய ரௌரவயாதனை இதிற்சிறிதும் கிடைக்காது. அதே ஸ்ரீ பரசிவன் தனது திருவாக்கால் கூர்மபுராணத்தில்—

'கமெஸவ்யெ3த்ரு8யிகம் வெத3பா3ஹ்யம் தமெதாஸ'

என்று அவை வேதபாஹ்யங்களென்று உபதேசித்தருளினமைகொண்டும் சதசத்ரூபனாக ஈசனைப் பாவிக்கவேண்டிய விதியைச் சிரமேற்கொண்டும் அசத்அம்சமான அவைதிகாகம சொரூபனையும் அவ்வள்ளலைத் தியானிப்பது குற்றமாகாது, அசத்தாகிய சம்சாராதி தூஷணம் ஞானசாஸ்திரங்களிற்செய்யப்படும் ஈசதூஷணமாகாது. மேலும் சிவாகமமே சொரூபமாயுள்ளதென்று தேற்றினர். இவர் சிவத்தியான பத்ததியைப்பார்த்தவரல்லர். சிவாகமக் கதையைமட்டும் கேட்டவர்தான். அப்படிக்கில்வழி அனேகத் தியானங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்ட ஆகமசொரூப சிவத்தியானத்தையே துணிந்தேற்றமாட்டார். பாருங்கள் - சிவத்தியானபத்ததியில் ஸ்ரீபஞ்சாக்ஷரப் பிரணவாதி நாமரூபத்யானங்கள் விதிக்கப்பட்டன. அவற்றிலொன்றான காமிகாதி சிவாகம சொரூபத்தியானத்தையே இவர் முக்கியமாய்க்கொண்டு சாஸ்திரிகளை நிந்திக்கவெழுந்தது மிகப்பிழையேயென்க. ஸ்ரீசிவமகாபுராணத்தில் வாயுசங்கிதையில் அக்நீஷோமீயாத்தியாயத்தில்—

அஹமக்3நிஶிரோநிஷ்ட2: ஸோமஶ்ஶிரஸி ஸம்ஸ்தி2தா|
அக்3நீஷோமாத்மகம் விஶ்வம் ஆவாப்4யாம் ஸம்ப்ரதிஷ்டி2தம்||

'நான் அக்னியில் உள்ளவன், நீ ஸோமனுள் உள்ளாய், ஆகவே அக்னீஷோம ரூபமான எல்லாப் பிரபஞ்சமும் எம்மாற்றான் தரிக்கப்பட்டதாம்' என்று சொல்லப்பட்டமையால் எவனாவது சிதாக்னிபாவனம் அசுசி என்றால் அவனும் சிவத்துரோகியாவான்போலும். மேலும் பஸ்மசொரூபன் ஈசனென்று புராணங்கள் கூறிட்டால் குப்பைச் சாம்பலைத் தூஷிப்பதும சிவ நிந்தையாமே.

'புல்லிங்க3ம் ஸர்வமீஶாநம் ஸ்த்ரீலிங்க3ம் ப4க3வத்யுமா'

'ஆண்பால் எல்லாம் ஈசனேயாவான், பெண்பாலெல்லாம் தேவியுமையாமென்று வேதபுராணங்கள் கூறினமையின், காக்கை, கழுகு முதலிய ஜந்துக்களை எச்சமயமும் வைதிகவிரதத்துள்ளார் தொடக்கூடாது என்றால், இஃதும் ஓர் சிவ தூஷணமாமோ. அந்தோ! ருத்திரஹிருதயவுபநிடதம், அதர்வசிரம் முதலியன ஸ்பஷ்டமாய்ப் பிரமன் விஷ்ணு ருத்திரன் இந்திரன் முதலிய சர்வப்பிரபஞ்சமும் ருத்திரரூபமெனப்பட்டதே. அவற்றில் எதைத் தூஷித்தாலும் சிவதூஷணந்தானே. விஷங் கொடியதென்றால் ஒரு சிவதூஷணம். கொலைக்காரன் பாவியென்றால் அஃதொரு சிவதூஷணம். பாஷண்டன் பாவியென்றால் அதுவுமவ்விதமேபோலும். சிவ சிவ! என்ன சைவப்பற்று? என்ன சமரஸபாவம்? எத்தன்மைச் சிவானுபவம்? அறிஞர்காள்! ஸ்ரீருத்திரத்தில் நாயீறாகவுள்ள எல்லா ஜந்துக்களையும் குலாலாதி சங்கரர்களையும் சிவரூபமென்று வேதம் ஓதியபடியால் இனி ஒருவைதிகன் கன்மகாலத்தில் நாயைத்தொடக் கூடாது. வேதபாஹ்யருடன் சம்பாஷிக்கக் கூடாதெனில், அவரை நோக்கி ஓ வைதிகரே! நீர் ஏதோ பூர்வபுண்யவசத்தால் வேதங்களைக்கற்றுணரும் வம்சத்தில் பிறக்கப் பாக்கியம்பெற்றும் எவ்வூழ்வினையால் இவ்விதம் வேதங்களில் ஈசன் திருமேனிகளென்று புகழப்பட்டவரை யிகழ்கின்றீரென்றும் மறக்கவிவர் பின்னிடார்போலும். வெகு நன்று. இதுவே விவாதகுராத்தன்மைபோலும். இச்சித்தாந்தத்தாலன்றோ—

ஸர்வலிங்க3மயா ஜக3த3யிஷ்டி2தமெவொக்த|
ஶாந: ஶ்ரௌதந வைதிகா: வத3ந்த்யத2 வேஷா:|
ஸ்வெய்யாஷயீ: ப்ரதிந வொவபாநா:|
தெ3ஹீவதெ3 ஹமயி தி3ஷ்ட வியெதலிங்க3:||

இவ்வுலகமெல்லாம் உம்மால் அதிட்டிக்கப்பட்டதென்றே சுருதி நாய்களும் அதனதிபதிகளும் வேதங்களில் நமஸ்க ரிக்கப்பட்டன. யாம் புல் பூண்டு முதலியவற்றையும் நாம் வணங்குவோம். தேகத்திடம் தேகியானவன்போல் நீர் எல் லாவற்றையும் அதிட்டித்தவரே யல்லவாவென்று ஸ்ரீமத் கஞ்சனூர் கல்யாணமூர்த்தி ஸ்ரீஹரதத்தாசாரிய சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியும் அம்மகானே—

[illegible]
[illegible]

ஆயினும் உம்மடியார் ஏனையக்கடவுளர்க் கடிமைபூண் டொழுகும் பேதமையை 'யதாசர்மவத்' என்று கேட்கப் படும் வேதம் சகிக்கிலது. என்றும்,

[illegible]
[illegible]

யாம் பிராமணர். கீழ்வருணங்களை வழிபடின் அதை ச்சிறிதும் மதியேம். எமக்குப் பிரபதப்பிராமணம் பிரமா ணமாதலாலென்றும்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

உடைந்த வோர் ஓடம் மற்ற வுடைந்த வோடத்தைக் கரையேற்ருது. ஓர் கல் மற்றொருகல்லைக் கரையேற்ருது. ஆயின் பிறந்தும் இறந்தும் உலத்துழலும் தேவகணங்கள் ஸம்ஸ்காரத்தில் பயந்தொழுகும் எனக்கு எவ்விதம் சர ணமாகும் என்றும் இன்னும் பலவாயும் விஷ்ணுவை சாமான்ய ஜீவகோடியாகவும் அவரை முமுக்ஷு வுபாஸிக் கவேண்டுவது அனுவசிதம் என்றும் அவ்வதிகாரிக்கு (அவ் விஷ்ணுவும் சிவாதிஷ்டித ஸொரூபன் என நம்பி முற் கூறியபடி வழிபடத்தக்கவனுயினும்) அவனை வழிபடுதற் குக் கருதிய பயன்யாது மளிக்க வலியற்றதெனவும் நன்கு நிரூபித்தனர். மேலும் இம்மகான் சிவபூஜாகாலத்தில் எதி ரில் உலர்த்தியிருந்த நெல்லை ஒரு கன்று தின்றமைகண் டும், ஸ்ரீ ருத்திரம்ஜபிக்கும் சமயமாகவே, அது சர்வஸ்வ ரூபனுன சிவனே ஏற்றது எனப் பாவித்தார் எனவும், அவர் மனைவியார் அதைப்பசுகியில் வெருட்டினராகவே இவருக்கு இவர் சீடர் பாண்டிநாட்டரசன் சிவலிங்கபூபா லர் அனுப்பிய நெல்பொதிகளில் பகுதி காவிரியாற்றில் கரைந்தனவென்றும், அவர் திவ்யசரித்திரத்தில் உண்டு. இவ்விதமகானைப் பார்த்து இனி இவ்வையர் ஓ மகானே நீவிர் அனேககோடி ஜன்ம சுகிருத பரிபாகத்தால் உலக த்துள்ள சராசரம் யாவும் சிவமயம் என்று பாவிக்கும் பெரும்பேறுபெற்றும் அந்தோ! உம்மால் சிவரூபன் என்று 'கூவெஷ்யாஷயீ:' என்றவிடத்தில் குறிக்கப்பட்ட ஸ்ரீ சிவ பிரான் சரீரமாய் ஸ்ரீமந் நாராயணனை எவ்விதம் மோக்ஷ ச்சுக்களுக்குப் பூஜ்யனல்லவென்று தூஷித்தீர்! அந்தோ! நாராயணேபநிடதத்தின் பொருளை விசாரிக்குமிடம் அத் திவ்யநாராயண சரீரத்திலேயே சிவனை வழிபடவிதித்தது வுபநிடத மென்று காட்டினீரோ; அதைமறந்தீரோ! எந்த விஷ்ணுத்வேஷம் அங்ஙனம் உம்மைச்செய்தது? அதே நா ராயணன் கருடமாந்திரகர்கள்போல சாக்ஷாச் சிவபாவனை யாலே சர்வ சிவலக்ஷணங்களையும் பெற்றவனெனப் புகன் றிடும் வேதத்தை யத்தியயனம்செய்து அதன்பொருளறிந்து அவ்விஷ்ணு சரீரனுன ஸ்ரீ பரசிவமூர்த்தியை நாடோறும் வழிபட்டும் அவனது சிறந்த திருமேனியென்று நாராய ணேபநிடதம் கூறிய ஸ்ரீமன் நாராயணனை இவ்விதமள விலாவழி தூஷித்துவருவது சிவஞானிகளுக் கடுக்காது. அ டாது! அடாது! மிகவுமடாது. இஃதொருபெருங்கொடுமை! கொடுமை! கொடுமை! என்று ஏதேனுமெழுதி அம்மகா வவதார புருஷனையும் சிவதூஷணமாபாவத் துக்குள்ளாக்கு வார்போலும்! ஸ்ரீஹரதத்த சுவாமிகள் ஈசனுக்குரைத்த பஞ் சவைதிக லக்ஷணங்களில் முக்கியமாய் நாராயணசரீரத் தும் சூரியமண்டலத்துமே உபாஸ்தி விதித்ததாக வெளிப் படுகிறது, ஆகவே அவர் நாராயணன் பரமோத்தமாதிகா ரியாகிய முமுட்சுவுக்கு விஷ்ணுவாதி தேவதோபாஸ்திகூ டாதென்றதும் அதைப்பரசிவன் திருவுளம்பற்றி அவரை எரிமழுவினின்று மீளச் செய்ததும் இவருக்கும் இவர்சொ ல்லும் சித்தாந்தங்கட்கும் பெருங்கேட்டை விளைவிக்கி ன்றதென்றறிவாராக. முன் யாகத்தை நிந்தித்து அவ்வித யாக நிந்தை செய்பவரை அமணரென்று வெறுத்து ஒது க்கியும் தமது பிதாவுக்கு ஸ்ரீமதக்னிஷ்டோமத்தைப் பரசி வானுக்கிரகத்தால் பூர்த்திசெய்தும் வைத்த ஸ்ரீமத் ஞானச ம்பந்த குருநாதனுக்கு விரோதியானர். இங்கு ஸ்ரீஹரதத்த யோகிகள் ஸ்ரீமதப்பயதீட்சிதரவர்களாதி அனேக சாம்பவ விரோதியாய் முடிகின்றது. இவரது எந்தப்பாவத்தின்பய னே வறியோம். எந்த ஸ்ரீமதப்பயதீட்சிதமூர்த்திகள் சிவ த்தியானபத்ததியில் காமிகாதி சிவாகமங்களைச் சிவசரீரமாக த்தியானிக்க விதித்தனரோ. அவரே சிவதத்துவவிவேகத் தில் ஸ்பஷ்டமாய் சிவபுராணம் கூர்மபுராணம் இவற்றின் பிரமாணவலிகொண்டு இவர் கைகொண்டுய்யும் காமிகாதி சிவாகமங்களை அவைதிகம் என்று விசாரித்து நாட்டினரே, அதை இவர் அறிந்திட்டாரில்லை யென்பது துணிபு. அறி ந்திட்டால் அவரையும் திட்டாது விடார். அதேமகான் ஸ்ரீ கண்டயோகிகள் பாஷ்ய வியாக்கியானமாய் சிவார்க்கம ணிதீபிகையிலும் ஸ்ரீமந் நயமணிமாலையிலும் அதனுரையி லும் அவைதிக பாசுபதங்களைப்பற்றி நிரூபித்த வசனங் களை இனியாவது இவர் பார்த்து அடங்குவாராக. காமிக

மாதி தந்திரங்களில் சிலபாகம் அவைதிகம் என்றும் சொல்லாது அவை இருபத்தெட்டும் அவைதிகங்கள் என்று நாட்டின மூல மூர்த்திகளாகிய சிவாத்துவித சித்தாந்தப் பிரவர்த்தக பரமாசாரியைரைத் திட்டிப் பாவத்துக்காளாகாது இவர் தப்பியதாக நினைக்ககூடாது. ஏதோ வவைதிக தந்திரங்கள் அவைதிகங்கள் என மூதறிஞர் சென்றவழியிற் சென்ற உரையாசிரியர் பத்திராதிபரே இவர் திட்டுக் கிலக்காகிறுர். ஆகவே, அவர் மற்றவரைத் திட்டாதொழியார் என வெவருமறிவார். அவர் எழுதும் எவ்விஷயத்துச்கும் வசைச்சொற்களணிகல்மாகவே அவற்றை விட்டொழிக்க அவரால் முடியாது. இஃதொன்றைக் கொண்டு ஆசிரியர் கலிகண்டகோத்தாரத்தைத் தாக்கியது, முன்னர் கைவல்ய தீபிகையை அத்தியாச்சிரமச் சொல்லுரையிற்ருக்கிப் பரிபவப்பட்டதற் கிலக்காயது காண்க. மேலே “சிவாத்துவித சித்தாந்த பாஷ்யம்” என்று இவர் புதிதாய் சுவீகாரம் செய்துகொண்ட ஸ்ரீகண்ட பாஷ்யத்தில் பாசுபத்யாதி கரணத்தில் உள்ள ஏகதேச மதானுவாத வசனங்களே, முன்னர் இவர்கொண்ட மதத்துக்கும் ஸ்ரீகண்டயோகிகள் அருளிச்செய்த பாஷ்யத்திற்கும் ஏற்பட்டுள்ள சதானுபத்திகளேக் காட்டுமிடம் விரித்து மறுத்தோமாதல்ால் அதை மீண்டும் இங்கெழுதவேண்டிய அவசியமில்லே. மேலும் இது ஏகதேசிமதம் என்பதற்கு வேறு பிரமாணம் தேடவேண்டாம். மூன்ரும் அதிகரணம் முதல் இறுதிவரைப் பற்பல விடங்களில் அனேகப் பிரமாணங்களுடன் வேதங்கள் அறுதியபௌருஷேய நித்ய சுயம்புக்களென்று நாட்டிய பாஷ்யகாரரா சுவமதமாகவேதங்கள் சிவகர்த்திருகங்கள் என்பர்’ என்பதை யாலோசித்தாலே போதும்! இங்ஙனமிருக்க நீட்டி முழக்கி சிவாத்துவித ஸ்தாபனம் செய்த நீலகண்டசிவாசாரியர்.

வயந்து வேதஶிவாகமயோர்பேதம் ந பஶ்யாம꞉ |
வேதோ(அ)பி ஶிவாகம இதி வ்யவஹாரோ யுக்த꞉ ||
தஸ்ய தத்கர்த்ருகத்வாத் - அத꞉ ஶிவாகமோ த்விவித꞉-
த்ரைவர்ணிகவிஷய꞉ - ஸர்வவிஷயஶ்சேதி || வேத꞉
த்ரைவர்ணிகவிஷய꞉ ஸர்வவிஷயஶ்சாந்ய꞉ உப
யோரேக ஏவ ஶிவ꞉ கர்தா [illegible]
[illegible]

‘‘யாம் வேதத்திற்கும் சிவாகமத்திற்கும் வேற்றுமை கண்டிலம். சிவபெருமானல் அருளப்படுதலின் ‘வேதமும் சிவாகமம்’ என வழங்கப்படும். சிவாகமம் மூவருணத்தாருக்கே உரித்தாதலாலும், நான்கு வருணத்தாருக்கே உரித்தாதலுமாமென இருதிறப்படும். அவற்றுள் முன்சொல்லப்பட்டதே வேதம் எனவும் பின்னே யது சிவாகமம் எனவும் வழங்கப்பட்டன. இவ்விரண்டும் (வேதமும் சிவாகமமும்) செய்தகர்த்தா ஒருவரேயாம். பஞ்சப்பிரமம், பிரணவம், பஞ்சாக்கரம், பிராசாதமுதலிய மந்திரங்களும் பதி பசு பாச முதலிய பொருள்வழக்கும், திருநீற்றின் உத்தூளனம், திருபுண்டரம், உருத்திராக்ஷதாரணம், சிவலிங்க பூஜை முதலிய தருமங்களும், பிறவும் ‘வேதஞ் சிவாகமம்’ என்று மிரண்டினும் சமமாகக்காண்டலால், அவ்விரண்டும் பிரமாணமே. ‘ஆதலால் கர்த்தா ஒருவனே. ஆதலால் அவ்விரண்டிற்கும் பொருள் ஒன்றேயாம்’ என்றுபாஷித்தாராகவும், அந்நீலகண்ட சிவாசாரியருடைய விசிஷ்டாத்துவிதக் கொள்கையைச் சிவார்க்கமணிதீபிகை முதலிய அரிய கிரந்தங்களால் ஸ்ரீ அப்பயதீக்ஷிதராம் பெரியோர் ஏகான்மவாதத்திலும் சிரேஷ்டமுடையதாக ப்ரமாணங்காட்டி ஸ்தாபனம் செய்திருப்பாராகவும், அவ்விரு பெரியோர்களுடைய கருத்துக்கு முற்றும் மாருக லௌகிகார்த்தவருவாயும் புகழ்வருவாயுமே பரமபுருஷார்த்தமாக மதித்து சிவத்துரோகத்துக்கு எட்டுணையும் பட்டப்படாது சிவாகம தூஷணம் செய்தல் முறையோ! முறையோ!! சிவதா! சிவதா!!’’ என்று முறையிட்டது வீணிற் பத்திரிகையை நிறப்பியதேயன்றி வேறில்லே என்க. இவ்வளவெழுதியதாவது உண்மையோவெனில், அவற்றிலுள்ள குற்றங்களே எடுத்து இவருக்குள்ளதுரபிமானம் வெளிப்படக் காட்டுவோம். இவர் எழுதிய பாஷ்யவசனம் சிறிது பாடபேதமிருப்பினும் தென்னாட்டுப் பாடத்துக்கு வடநாட்டுப் பாடம் இந்த ஒருவிஷயத்தில் சுத்தமேயென்பது ஸ்பஷ்டம். எதனல் யெனில், இந்த அதிகரணம் சிதம்பரதத்துவ நிர்ணயம் முதலிய பல நூல்களில் எடுத்து விசாரிக்கப்பட்டது. அங்கு காட்டப்பட்ட வசனங்களுடனே ஸ்பஷ்டமாய் ஸ்ரீ காசிவித்யாஸுதாநிதியில் அச்சிட்டு வெளிவந்த ஸ்ரீ நீலகண்டபாஷ்யத்தில் இவ்வதிகரணம் காணப்படுகிறது. அதில் இறுதியில் ‘ஆதலால் கர்த்தா · ஒருவனே. யாதலால் அவ்விரண்டிற்கும் பொருள் ஒன்றேயாம்’ என்றது இவர் கைச்சரக்கு· இது மூலத்தில் இல்லே. ஆனல் முன்னுள்ள வசன சமுதாயத்திற்கு இக்கருத்துக் கூடுமேயெனின் அது கூடாது. அங்கு சொல்லப்பட்ட பலவேதுக்களில் இக்கர்த்திரு ஐக்யம் ஒரு ஏது. அதையேகொண்டு முடித்தது இவர் சமர்த்து. இது பொருந்தாமையைக் காட்டுவதற்கு முன்னரே இவர் எழுதிய மொழிபெயர்ப்பின் தவறைக் காட்டிடுவோம். நான்கு வருணத்திற்கே உரித்தாதல் என்று இவர் தேற்றியது மூலவிருத்தம். மூலத்தில் ‘ஸர்வவிஷய꞉’ ‘எல்லாருக்கும் உரித்தானது’என்ற சொல்லிருக்க, அதை இவ்விதம் பொருள்படுத்தியனியாயமாய் அபரசைவர், அந்நியசைவர்களேத் தஞ்சைவகோ

ஷ்டியிலிருந்து கருணையின்றி விலக்குதல் இவருக்கழகன்று. ஆகவே, இங்குகுறித்த ஏகதேசிமதத்திலும் வேதம் சர்வசம்ஸ்கார சம்பன்னரும் சிவாஞ்ஞாரூப வருணாச்சிரமபத்தருமான மூவ்வருணத்தாருக்குரியது என்றும், ஆகமங்கள் சர்வாதிகாரிகம் என்றும் சொல்லப்பட்டது; அதனாற்றான் இவரினத்தாரான முன்னூருவண்டிச் சுவடிக்காரரும் உமாபதிசிவமும் வருணாவரரிடம் தீக்ஷைபெற்றதும் பெத்தான்சாம்பானுக்குப் பேதமறத்தீக்ஷைசெய்ததும் ஆகமவிதிப்படியேயாம் என்றதாயிற்று. மேலும் சிவார்க்கமணிதீபிகையில் விசிட்டாத்துவிதம் ஏகான்மவாதத்திலும் சிறந்ததென ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதராம் பெரியோர் சொன்னதாக ஓர் ஸ்வப்னம் காண்கின்றார். அம்மகாபுருஷர் சிவாத்துவிதவிநிர்ணயத்தில் நிர்விசேஷ ப்ரம்மவாதமே ஸ்ரீகண்டருக்குத் தார்பரியார்த்தம் என்றும், இதே பாசுபத்யாதி கரணத்தில் ஸ்பஷ்டமாய் காமிகாதிகள் அவைதிகங்கள் என்றும், சிவார்க்கமணிதீபிகை, சந்திரிகை, பரிமளம் நியாயரக்ஷாமணி, சிவதத்துவவிவேகம், நயமணிமாலை முதலிய அனேக நூல்களில் தாபித்த ஸ்ரீமதத்துவித வித்யாசாரியரான ஸ்ரீமதப்பயதீட்சிதசுவாமிகள் ஏதோ ஏகான்மவாதத்திலும் சிரேஷ்டமுடையதாகவும் விசிட்டாத்துவிதத்தைக் கொண்டதாகவும் எழுதி யிவர் தம்முள் மகிழ்வது சுவப்னராஜ்யத்தில் அனேக சத்துருக்களை வென்று மகாராஜாவாய் நின்ற தன்மையையே யொக்கும். நிற்க. இவர் தம் முன்னோர் சிலர்கொண்ட அவைதிக சைவமதத்தினும் வேறு என்று குறித்து சிவாத்துவித ஸ்வீகாரம் செய்து அதற்கு மூலபாஷ்யாதிகள் கிடையாமைபற்றி ஸ்ரீகண்டபாஷ்யத்தை மனையாளுக்கு மங்கைகள் மணவாளனைக் கொள்ளும் முறைகொண்டு, மீண்டும் அது விசிட்டாத்துவிதமான நேர்மை பிறர்சொல்லவறிந்து, மீண்டும் மெள்ள மெள்ள அவ்விசிட்டாத்துவிதத்தில் இரங்கி மூழ்கப்பார்த்து, மெல்ல இங்கு 'ஸ்ரீகண்டபாஷ்யம் விசிட்டாத்துவிதம்' என்று சொல்லித் துலைத்தனர். ஓர் வைதிக பாஷ்யகாரர் வலியின்றி வைதிகரை எதிர்ப்பது ஏலாது பற்றி விசிட்டாத்துவிதியை நிந்தித்த தம்பிரானுதிகள் சீடருடன் இன்று அத்துவிதியோடு விவாதம் செய்யவாற்றலற்று அவர்காலில் விழ நேர்ந்தது நிச்சயமாம். துவிதத்துவேஷபாபமும், அவரும் தாந்திரிகராகவே தன்னினம் தழுவுமியல்புமே காரணமாகக் கொண்டெனபது ஸ்பஷ்டம். நிற்க. இவ்வளவு எழுதியதும் முன்னர் ஸ்ரீகண்டபாஷ்யத்துள்ள சதானுபபத்திகளில் எம்மால் மறுக்கப்பட்டனவை. மேலும் இவ்வதிகரணம் அவைதிக பாசுபதத்தைப் புகழ்ந்த ஏகதேசிமதத்துடன் உள்ளதென்று முன்னரே காட்டப்பட்டமையின் அதை மீண்டும் இங்கெழுதோம். இவர் எங்குகண்டாலும் 'ஆகமம்' என்ற சொல்லைத் தமதென உரிமைகொண்டவராய் வருந்துகிறார். இவர் கைச்சரக்குள்ளது தக்க காரணமோ என்று கவனிப்பாம். ஓரேகர்த்தா வுடைய நூல்கள் எல்லாம் சமப்பிரமாணமென்றார். அங்ஙனமாயின், பதினான்கு வித்தியாஸ்தானங்களையும் சிவபிரான் ஸிருஷ்டித்தார் என்று பாரதம் ஆனுசாஸநிகம் புகன்றமையாலும் அதேவிடத்து உலோகாயதம் யோகம் பாசுபதம் பாஞ்சராத்திரம் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவன் ஈசனே எனவும் ரூபிக்கப்பட்டமையின், உலோகாயதமும் தர்க்கசாஸ்திரமும் வேதசமமாயாவது, இவர் ஒப்பி யேற்ற பாசுபதசமப்பிரமாணமாயாவது ஆவதை இவர் ஒப்பவேண்டுமே. மேலும் மகாவிஷ்ணுவே பாஞ்சராத்திரத்தையும் புத்தாகமத்தையும் சொன்னார் என்றால், அது இரண்டும் சமப்பிரமாணமோ? பிரஹஸ்பதியே தருமசாஸ்திரத்தையும் சார்வாகநூலையும் இயற்றினார் எனில், இரண்டும் சமப்பிரமாணமோ? பரசிவனே சிவதந்திரங்களையும் சாக்ததந்திரங்களையும் வெளியிட்டார் எனில், இரண்டும் சமப்பிரமாணமோ? ஒரே வேதவியாஸர் தர்மசாஸ்திரம் இதிகாஸ மாயமகாபாரதம் ப்ரம்மசூத்திரங்கள் இவற்றையாக்கினர் எனில், இவைகள் எல்லாம் சமப்பிரமாணமோ? கௌதமர் ஒருவரே சிவ சாஸ்திரங்களையும் தர்க்கத்தையும் இயற்றினார் எனில், இரண்டும் சமப்பிரமாணமோ? ஒரே மாதவாசாரியர் கர்மஞான காண்டங்களுக் குரைசெய்தார் எனில் அவ்விரண்டும் சமமோ? ஒரே சாண்டில்யர் ஸ்மிருதியையும் பாஞ்சராத்திரத்தையும் சொன்னார் எனில், இரண்டும் சமமோ? ஒரே பதஞ்சலி வைத்திய யோக சந்த சாஸ்திரங்களையும் சிவார்ச்சனவிதி பரமார்த்தசாரங்களையும் இயற்றினார் ஆகவே அவை சமப்பிரமாணங்களோ? ஒரே கிருஷ்ணன் வியபிசாரத்தையும் கீதையி னுபதேசத்தையும் சிவபூஜையையும் அற்புதமாகச் செய்தமையின் இவை எல்லாங் சமதர்மங்களோ! ஒரே ப்ரம்மதேவன் ஸமஸ்த ஸத்வித்தைகளையும் புத்திரீகமான மகாபாதகத்தையும் செய்தமையால் இரண்டும் சமமோ? இவ்விதம் பல விபரீதசங்கைகள் உண்டாகக்கூடிய இந்த யுக்தியைப் பிரதானமாக பாஷ்யகாரர் சொல்ல மறந்ததை இவர் எடுத்து முடிவுரை துணிந்து கூறியது மிக வழகினும் அழகே. இவர் என்செய்வார்! இவர் கொண்டொழுகும் அவைதிக நவீன சைவ சித்தாந்தம் மூலயுக்திகளற்றதாகவே, அவ்விதம் முன்பின் முறணவும் ஏதோ விபரீதமும் வசைச்சொல்லும் நிறைந்த நூல்களை எழுத நேரிடுகிறது. நிற்க ஏதோ லௌகிகப் பொருள் வருவாய்க்காகவும் புகழ் வருவாய்க்காகவும் பிறர்பாடுவருவதாகச்சொல்லி அவ்வியாஜ பரோபகார துரந்தர பரம விரக்த பாரமேசுவர பரமைகாந்தியம் தம்மிடம் நிறைந்ததாகச் சூசிப்பத்தார். அதுவிஷயம் காசியிலுள்ளார் எவரும் அறிவார். இவ்வையர் புகழையும் விரும்பார் தென்னாட்டு நகரத்துச் செட்டிமார். யாழ்பாணிகள் தென்னாட்டுச் சைவ மடாதிபதிகள் பொருளையும் அணுவேனும் விரும்பார். இவர் வருணாச்சிரமங்களில் பற்றுவைத்தாற்றான் பயன் யாது? இவருக்கு அவர் தம்மைப் புகழ்ந்துகொள்வதுக் கேற்றவைராக்யத்துக்குத் தக்கபடி சந்நியாஸம் செ

ய்துக்கொள்வதற்கோ, அவருக்கு அவ்வாச்சிரமத்துள்ள துவேஷமும் அதற்குரிய அத்துவிதநிஷ்டாதுவேஷமும்இவர் கொண்ட அவைதிகாகமங்களில் காணப்படும் சந்நியாஸ நிந்தையும் பெரும் இடையூறாயின், மற்று கிருகஸ்தாச்சிரமத்துக்கோ சௌகரியமில்லை. ஆகவே வருணாச்சிரம பாஹ்ய சித்தாந்தம் ஒன்று செய்துகொள்வதே இவ்வித சங்கட சமய சஞ்சீவியென்று கண்ட ஐயர் வெகுகாலமாய் காசியில் அற்புத சித்தாந்தவித்தையைக் கண்டெடுத்துத் தென்னாட்டுப் பத்திரிகைகளில் விதைத்துப் பயிர்செய்ய முயன்றுவருகின்றார் போலும்! இதற்கோர் முறட்டுக்குறி 'தலையிற்றலையிற் சிவதா? சிவதா?' என்று சமத்தினார். இதில் தாதா எதன்பொருட்டோ அறியேம். 'ஶிவஶிவஶிவஶம்ஸம்' முதலிய கவிவாக்கியங்களிலும்। பாத்துமாதி புராணங்களிலும் 'சிவ சிவ' என்ற சொல்லையே மேற்கண்ட விடம் போன்ற விடங்களில் உபயோகிக்க வழக்கமும் விதியும் உண்டு. இவர் எல்லாவற்றிலும் விலக்ஷணராகவே, இங்கு மப்படியாவது அவருக்குக் குற்றமல்ல? மேல் இவர் சிலவரிகளில் ப்ரம்மவித்யா பத்திராதிபரையும் காசியில்வசிக்கும் சிவானந்தசுவாமிகளையும் ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகளையும் தத்துவராயர் என்பவரையும் வாயில்வந்தபடி திட்டித் தமக்கு அவர்களிடத்தில் உண்டான ஆக்கிரகத்தை ஒருவாறு அடக்கித் துலைத்துக்கொள்ளுகிறார். அன்னோர் மையைப்பற்றியும் சிறிதாராய்வாம். அவ்வரிகளில் எழுதும் இவ்வையர் முதலில் சிவாகமதூஷணவிஷயத்தில் பத்திராதிபரைப்போல சிவாநந்த சுவாமிகளுமாகவே, அவரை ப்ரம்மஸ்ரீ யவர்கள் கலிகண்டகோத்தாரத்தில் 'தன்யர்' என்று புகழ்ந்தார் என்றும், இருவரும் ஓரினம் என்றும் பரிகஸிததார். அவர் துவேஷத்தாலும் பொறாமையாலும் சொன்னாலும் எமக்கிருவரும் ஓரினம் என்பது சம்மதமேயாம். எதனால் எனில், சுவாமிகளோ ஸ்ரீகண்ட வித்யாகுருவும் ஸ்ரீமதத்துவித வித்யாசாரியரும் சாம்பவகுல பரமாசாரியரும் சிவாத்துவித நிர்ணய கிரந்தகர்த்தாவுமான ஸ்ரீமதப்பயதீட்சிதசுவாமிகள் திருவம்சத்துதித்து, சர்வசாஸ்திரமரியாதைகளையும் பெரியோரிடம் முறையோடு கற்று, தென்தேசத்தில் அனேக சத்கருமாக்களை வேதவிதிப்படி யனுட்டித்து, அனேகவிடங்களில் சிவோத்கர்ஷ ஸ்தாபனம்செய்து, முறைப்படித் துறவறம்பூண்டு, திருக்காளத்தி முதலிய திவ்யத் தலவாசஞ்செய்து ஸ்ரீ காசியையடைந்து, நிரந்தரம் ஸ்ரீ சிவானுசந்தானபாக்கியம்பெற்ற பரமஹம்ஸாசிரமிகள். ப்ரம்மஸ்ரீ யவர்களும் ஸ்ரீமத் ஜகத்குருநாதர் அவர்களால் துதிக்கப்பெற்ற ஸ்ரீமத் வைதிகவாரண பரமசம்பந்த ஞான கௌணியர்பிரான் ஆளுடையபிள்ளையார் திருவம்சத்தி லவதரித்துத் தற்காலம் தென்னாட்டில் சிறப்புற்றோங்கும் ஸ்ரீ மகாமகோபாத்திய சாம்பவகுல ஸஞ்சீவியான ஸ்ரீமத் சாஸ்திரிகள் அவர்கள் திருவடி வணங்கி, முறைப்படி அனேக ஸத்சாஸ்திரங்களைப் பயின்று, இன்னாடெங்கும் புகழப் புறமதப் பிசாசங்கள் சூரியனைக்கண்ட இருள்போல் பறக்கச் சற்சாஸ்திர ரகஸியார்த்தப் பிரசங்கமாரிபொழிந்து வருணாச்சிரம நற்பயிரைக் காப்பாற்றி, இக்கலி வலிகொண்டு துராக்ரகபூஷணராய் சிவசின்னச் சிவபத்தப் பிராசீனாசார்ய சன்மார்க்க நிந்தைசெய்துவரும் பல வைணவ பாஷண்டர்களையும் அனேக நாஸ்திகர்களையும் பற்பல நூல்களாலும் பத்திரிகைகளாலும் பறக்கடித்து, குழந்தைமுதல் வ்ருத்தரீறாக எந்த வைதிகரும் கொண்டாட அனேக சற்கன்மங்களை யனுஷ்டித்ததுமன்றி, கன்மசாஸ்திர நிபந்தனமாய் ஸ்மிருதிமுக்தாபலப் பிரபையால் அனேக வைதிகர்களுக்கு அளவிலுபகாரம்செய்து, நிரந்தர சிவபூஜாதுரந்தரராய் அனேகருக்குத் தீராப்பிணிகளையும் தமது சுத்த வைதிக மார்க்க சிவாராதன சத்பிரஸாதத்தால் நிவர்த்தித்துத் தென்னாட்டை மேனாடாக்கி, அன்று இவர் குலத்து வசிஷ்டர் பராசரர் வேதவ்யாஸராதிகளைப்போல் அளவிலாப் பெருமையும் கீர்த்தியும் ஆன்மகுணமும் பொருந்தி, தமிழ்நாடு தெலுங்குதேசம் மலையாளம் முதலிய பல தேசவாசிகள் அவதாரபுருஷரோ வென்றுமதிக்க, ஸ்ரீ காசியுஜ்ஜயினி பிரயாகாதி திவ்ய க்ஷேத்திரவாசிகளான யதிகளும் மதித்து வாழ்த்தி அடிக்கடி அனேக மங்களவாசிகூறப் பதம்பெற்ற ஓர் மகா புருஷனாதலின் இவ்விதமுள்ளவர் தம்மினத்தான் தேவோர். இவர் வெறுத்து ஒதுக்கின ஸ்ரீ சங்கரகுருநாதனும் இவர் இனமென்பார். அதுவும் பொருத்தமுடையதே. இவரெல்லாம் வேதாந்தங்கட்குப் பொருத்தமில்பொருளுரைக்கும் புல்லறிவாளராகவே சிவரகஸியம் கூர்மபுராணம் முதலிய புராண விதிகாஸங்கள் அவர்களைப் புகழ்கின்றன. அந்தோ! அதோடுவிடாது எவர் இவர்கொண்டொழுகும் அவைதிக சைவாகம விரோதிகளோ, அவர்களையே சிலாகிக்கின்றன. ஸ்ரீ சிவபுராணம் 'வடுகஜாதி' என்ற குருக்கள்ஜாதி, வேதாதிகார சூன்யஜாதி யென்கிறது. அந்தோ! கூர்மாதி யனேக புராணங்கள் வைதிகரையே புகழ்கின்றது. மேலும் ஆஜன்மவைதிகரும் ஆகம சம்பந்தமற்றவரும், என்றும் வேதவிதிவழாது வேள்விகளைச் செய்து நடராஜார்ப்பணம்செய்யும் தில்லைவாழந்தணரையே யன்றோ சிவரகஸியம் புகழ்ந்தது. சிவபக்தவிலாஸம் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் முதன்மையுளார் என்றது. சாக்ஷாத் ஸ்ரீ த்யாகராஜப்பெருமானும் அவர் பெயரையே அன்றோ அன்று வன்றொண்டருக்குத் திருத்தொண்டர்தொகையின் காப்பாகவெடுத் துபதேசித்தருளினர். அதே தில்லைவாழந்தணர் வம்சத்துதித்த, ஸ்ரீ கஞ்சுகனுதபூஷணதீக்ஷிதர் அவர்கள் ஸ்ரீ சொக்கநாததீக்ஷிதர் அவர்கள் முதலிய பண்டிதசிகாமணிகள் இயற்றிய சிதம்பர தத்துவ நிர்ணயம், வைதிக பரார்த்தபூஜா மீமாஞ்சை முதலிய நூல்களைப்பார்க்கும் பாக்யம் இவருக்குக் கிடைத்திருக்குமாயின் இவர் தற்காலம் காசியில்வசிக்கும் ஸ்ரீ சுவாமிகளைக் குறைகூறி அழிந்திடார். அவ்விதபாக்கியம் இவ்வாகமிகருக் கென்றும் கூடாது. ஆனால் ப்ரம்மஸ்ரீ யவர்கள் வேதாந்தங்கட்குப் பிழையர்த்தங்கூறும் சிலரை (ஜகத்குருநாதன், வித்

யாரண்யர், அப்பயதீக்ஷிதர், பட்டபாஸ்கரர், ஆதியோர் தம்மினமானமையால் பற்றினர். இவர் பற்றின சற்புராண ஸர்வேதிகாஸ பிரசித்தாவதாரவைபவர்களான மெய்கண்ட தேவர் பரஞ்சோதிகள் முன்னூறுவண்டிச் சுவடி பட்டா (உமாபதிசிவம்) முதலிய விவர்களால் அனேக வேதாந்தங் களுக்கு வியாக்கியானம் பிழையறச்செய்யப்பட்டு "அன்று சோமகாசுரன் ஹயக்ரீவாசுரன் ஹிரண்யாக்ஷன் இவர்கள் வேதங்களை அபகரித்துப் பாதாளம் சேர்த்த வண்ணம்" அவ்விரகஸியார்த்த சற்சம்பிரதாயத்தை புத்த மூர்த்திகள் புண்யாச்சிரமத்தில் (இலங்கையில்) சேமித்து வைத்திருந்தவர்போலும்! அவற்றை அன்று, ஹரி அனேக அவதாரங்களால் மீட்டு உலகத்தாருக்குதவியவாறு இவ்வேகா வதாரவர மூர்த்திகளும் இன்று ஆரியதேசத்துள்ள அவை திக தாந்திரிக சைவருக் குதவுவாராய்த் தம்மினந் தழுவி னர்போலும்! ஐயோ பாவம்! வைதிகார்ச்சன மீமாஞ்சை செய்தவர் யாவரென்பதும் இவருக்குத் தெரியாது. ஏதோ சன்னியாஸத்தில் இவருக்குள்ள குரோதம் சந்நியாஸிக ளிடமும் தாவியுலாவ அங்கு அச்சந்நியாஸிகள் எதிர்ப்பட் டார்போலும். அத்யாச்சிரமச்சொல்லுக்கு இவரைப்போல் முன்னூருவண்டிச் சுவடிக்கர்ாாதி வீண்கதைப்புலவருரை யால் சந்நியாஸம் என்ற பொருள் ஏற்படவில்லை. மற்று கூர்மபுராண லிங்கபுராண சௌரபுராணாதிப் பிரமாணங்க ளானும் சூதசங்கிதையானும் என்று நாட்டினோம். ஸ்ரீ ஜகத்குருநாதனருளியதாக இவர் சொல்லிக்காட்டும் பாஷ்ய மும் ப்ரம்மஸ்ரீ யவர்கள் விவரணமும் அந்தப் பிரமாணங் களையே தழுவியன வென்றோம். ஆகவே சுந்தரசுவாமிகள் மட்டில் ஏதோ சிறிது உரை நன்குசெய்ததாக இவர் அவ ருக்குக் கொடுத்த யோக்யதா பத்திரிகை பயனற்றதாயிற்று. அச்சுவாமிகளுக்கு இவர் யோக்யதாபத்திரிகை யில்லாமலும் லொக்யம் கூடும். நிற்க. இவரைப்போலவே ப்ரம்மஸ்ரீ யவர் களையும் தமிழர் குளறுபடையால் வேதாந்தார்த்தம் தெ ளியு மியல்பினராக வெண்ணித் தத்துவராயரைத் தூஷிக் கும் வழி சிறிது தூஷணைக் கிலக்காக்குகின்றார். அவர்கள் சீடருக்கும் கூட அந்த அனரிய வர்ணவர பாதசேவாதௌர்ப்பாக்யம் என்றும் வராது என்பதைக் கண்டிப்பாய் இவரை நாட்டைப்புறந்து வழக்கப்படிக் கின் ளியடையாளம் செய்து சொன்னோம் என்று இனியேனு மறிவாரா? இம்மட்டோடு நில்லாது இவரா நமக்கு நற் கதி கொடுப்பார் என்று ஜகத்குருநாதனையும் சேர்த்து ஏதோ வொரு தமிழருடன்கலந்து பேசுகிறார். அந்தோ ஓகலீ? என்ன விலாஸம் செய்கின்றாய்! இவருக்கு நல்ல கதிகாட்ட அவர் வேளாளர் குலத்தில் பிறந்தாரா? வைதி கத்தை யிகழ்ந்தனரா? தந்திரத்தைத் தழுவினரா? ஆரிய வெல்லை கடந்தனரா? இராக்ஷஸாச்சிரமம் சென்றனரா? ஆரியத்தைத் துறந்தனரா? வருணாச்சிரமங்களை வனாந்த னரா? நியாயமேயன்றோ! மேற்கண்ட குணங்களில் ஏதே னுமிருந்தால் இவருக்கு நல்வழிகாட்டலாம், வெகு அழகு! 'வருணாச்சிரம விதிகடந்தவர் அத்யாச்சிரமி' என்று ப்ரம் மஸ்ரீ அவர்கள் எங்கு பொருளுரைத்தார்களோ அறியேம்! இவருக்கு அத்யாச்சிரமம் ஸந்நியாஸம் என்பதைக் கண்ட மாத்திரையில் அதனிடம் துவேஷத்தால் இவ்விதம் ப்ரம் மஸ்ரீ அவர்களைத் திட்டியொழிந்தார். நிற்க. எவரும் எவ் விதம் பொருள்படுத்தினும் உலகஸிருஷ்டிமுதல் இதுவரை யில் வேதங்களுக்கு வியாக்யானம் வேதாந்தங்களுக்கு வ்யாக்யானம் முதலியன செய்த எவரும் இவர்கொண்ட ப்ரமாசாரியரான வேளாண்டலைவர்களும் இந்த 'அத்யாசிர மபதம்' அவைதிக சைவத்துள்ள கிரியாவதி ஹௌத் ரியைக் குறிக்கும் சொல் எனப் பொருள்படுத்தினரில்லை. ஆகவே இந்தப்பொருள் இவருக்கே தோன்றிய வற்புதப் பொருள். இதில் இவருக்கிணை எவரும் இல்லை. ஆகவே இவர் இதிலினமற்றவர். ஸ்ரீ ஜகத்குருநாதன் எழுதியதாக இவர் சொல்வதுபோல அப்பதத்துக்குச் சந்நியாஸமும் பொருள் என்பதற்கு உலகமுற்பத்திமுதல் இன்றுவரையில் புராணேதிஹாஸப் பிரமாணங்களையும் அனேக பாஷ்ய காரர் வசனங்களையும் காட்டினோம். எப்பிரமாணமு மின் றித் தம்புத்திக்குத் தோன்றியவாறு எழுதிவரும் இந் நவீன வவைதிகசைவருக்குச் சுவயமாசாரியத்தன்மை தகு மேயன்றி இவ்விஷயத்தில் வேறெந்த சைவரையும் ஆசிரி யர் எனல் கூடாது கூடாது! ஏதோ இவர்கண்ட கன வில் அனேகர் ஆரியரினத்தாரன்றி வேதாந்தச் சொற்க ளுக்குப் பொருளுரைத்த புண்யபுருடர் தம்மினத்துள்ள வர் உண்டென்பது தொனிக்க ஒருவாக்யம் எழுதுகிறார். அதுவிஷயம் அவர் கனவிலிருக்கக்கூடுமேயன்றி ஜாக்கிர ப்ரபஞ்சத்தில் கூடாது. மேலும் இவருக்கு விரோதப் பொருளுரைத்த ஸ்ரீ ஜகத்குரு சுவாமிகளாதி தீக்ஷிதசுவாமி களீறாக வனேகரை ஸ்தோத்திரம்செய்த சிவரகஸியம், இவ் வுண்மைகண்டு பிடித்த இச்சைவாசிரியரை ஒரு சுலோகத் தால் புகழ்ந்திடக்கூடாதோ. 125000-சுலோகங்கள் எழுதிய யோகாசாரிய சிவஸொரூப ஸ்ரீ ஜைகிஷவ்யமாமுனிவர்க்கு.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

'செந்திநாதய்யர் என்ற வோர் தமிழர் இலங்கையிற் பிறப்பார்; அவர் காசிசென்று 'அத்யாச்சிரம பதப்பொருள் விரிப்பார்; அது உலகஸிருஷ்டிமுதல் இன்றுவரை எவரு மறியாத பொருள்; மற்றவரால் கெடுக்கப்பட்ட பொருள். தந்திரங்களுக்கும் உபநிடதங்களுக்கும் சம்பந்தத்தைப் புதி தாக காட்டுவார். வேதவ்யாஸாதியோர் காணாத வேத விபாகம் ஒன்றை உபநிடதங்களிற் செய்வார்.

இன்னும் வரும்.